



ORIES FOR THE YOUNG

எளிதில் வாசிக்கும் வழி வரிசை

# இராஜன்
# சிறுவர்க்குரிய கதைகள்

(4, 5-ஆம் வகுப்புகளுக்குரியவை)

டாக்டர் மா. இராசமாணிக்கம், M.A., L.T., M.O.L., Ph.D.

தமிழ்ப்பேராசிரியர்; தியாகராசர் கல்லூரி,

மதுரை.

(புதிய பதிப்பு)

எம். பி. இராஜன் அண்டு கம்பெனி,

16-A, கரியப்ப முதலி தெரு,

வேப்பேரி சென்னை-7.

[பதிப்புரிமை] 1956 [விலை அணா 8

*Enlarged Edition June '56*

புத்தம்புதிய வாசகங்கள் :

## திராவிட வாசக மலர்

(சென்னைத் துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றவை)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 0—4—0 | 0—6—0 | 0—7—0 | 0—8—0 | 0—9—0 |

**Printed at the Sri Bharathi Press, Choolai, Madras-7.**

*All Rights Reserved by the Publishers.*

# இராஜன் எளிய வாசிப்பு வழி வரிசை

இவ்வாசக வரிசை சிறுவர் சிறுமியர் அகமகிழ்ந்து வாசித்துப் படிப்படியாக வாசிப்பில் திறமை பெறுவதற்குத் தகுந்த படித்தர முறையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வரிசை-யில் அமைந்துள்ள கதைகள் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவன. கதைகளுட்சில பழையனவாயினும், புதிய முறையில் சிறுவர் சிறுமியர்க்கு மேலும் மேலும் வாசிக்க வேண்டும் என்னும் விருப்பத்தை உண்டாக்கும் வகையில் வாசிக்கும் மாணவர்களின் வகுப்புத் தரத்திற்கு ஏற்றவாறு எழுதப்பட்டுள்ளன.

வாசிக்கும் கதைகளின் கூறுபாடுகள் சிறுவர் சிறுமியர் மனத்திற் பசுமரத்து ஆணி போல இனிது பதியத் தகுந்த வகையில் விளக்கச் சித்திரங்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய கதைகளை வெளியிடுவதில் வேண்டுந் திருத்தங்களைச் செய்து உதவிய **வித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்**களுக்கு என்றும் நன்றி செலுத்தும் கட்டப்பாடு உடையோம்.

கல்வித் துறையில் ஈடுபட்டுத் தமிழ் நாட்டுத் தனிப் பெருஞ்செல்வங்களாகிய சிறுவர் சிறுமியர் கல்வி முன்-னேற்றத்திற் கண்ணுங்கருத்துமாய் உழைத்து வரும் அன்பர்-கள், இவ்வாசக வரிசையைப் பலர்க்கும் பயன்படச் செய்து, எம்மை ஊக்கியருள வேண்டுகிறோம்.

சென்னை,
1-5-1948

பிரசுர கர்த்தர்கள்

# பொருளடக்கம்

---


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புண்டரீகர்—I | .... | 5 |
| 2. | புண்டரீகர்—II | ... | 9 |
| 3. | நாய் காட்டிய வீரச்செயல் | ... | 12 |
| 4. | ஓர் அரிய செயல் | .... | 16 |
| 5. | நம்பிக்கைத் துரோகம் | .... | 22 |
| 6. | உத்தம சகோதரன் | ... | 26 |
| 7. | குமண வள்ளல் | ... | 31 |
| 8. | அடக்கமுள்ள அரசன் | ... | 36 |
| 9. | நல்லவர் நேசத்தால் நற்கதி பெறலாம் | ... | 39 |
| 10. | திருமலை நாயகர் | .... | 43 |
| 11. | 'சொல்லாமற்செய்வர் பெரியர்.' | ... | 47 |
| 12. | கடமையே சிறந்தது. | .... | 51 |
| 13. | அன்னதானமே அனைத்திலும் சிறந்தது | .... | 55 |
| 14. | மங்கையர்க்கரசியார் | .... | 58 |
| 15. | கொள்வதைவிடக் கொடுப்பதே நன்று | ... | 62 |

# இராஜன்
# சிறுவர்க்குரிய கதைகள்

## 1. புண்டரீகர்—I

**'லோக தண்டம்'** என்னும் பட்டினத்தில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் மனைவி மிகவும் நல்லவள். அவ்விருவருக்கும் நெடுங்காலம் வரையில் பிள்ளை பிறக்கவில்லை. பிறகு ஓர் ஆண் மகவு பிறந்தது. அவர்கள் அதற்குப் **'புண்டரீகன்'** என்னும் பெயர் இட்டார்கள்.

புண்டரீகர் சகல கலைகளும் கற்றுத் தேறினர். வாலிபரானதும் அவர் ஓர் அழகிய பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார். அவர் சிறிது காலம் நற்குணம் உடையவராகவே இருந்தார்; பின்னர், தீயவர்களோடுகூடிக் கள் குடித்தல், சூதாடுதல் முதலிய கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டார். அவருடைய அடாத செயல்களைக் கண்ட தாய் தந்தையர் அவருக்குப் பல விதத்திலும் புத்தி புகட்டினர். எனினும், புண்டரீகர் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை. அதனுடன் நில்லாது அவர் அவர்களை வைவதும் அடிப்பதுமாயிருந்தார். சில நாட்கள் கழிந்த பின்னர், அவர் தம் பெற்றோ-

ருடன் இருக்கப் பிரியப்படாமல், தம் மனை-
வியை அழைத்துக்கொண்டு வேருேர் இடத்-
திற்குப் போய்விட்டார்.

அவர் பெற்ருேரும் தம் கொடிய புத்திரர் முகத்தில் விழிப்பது சரியன்று என்று எண்ணி வேறெங்கேனும் சென்று உயிர் விடத் தீர்மா-ணித்தனர். அப்போது பலர் காசிக்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களோடு அவ்விருவரும் நடந்து சென்றனர். புண்டரீ-கரும் தம் மனைவியுடன் காசிக்குப் பிரயாண-மானுர். அவர் வழியில் நடந்து செல்லும் பெற்ருேரைக் கண்டும், மனம் இளகவில்லை. அவரும் அவர் மனைவியும் இரு பரிகளின்மேல் ஏறிச் சென்று, காசிக்குப் பக்கத்தில் உள்ள **குக்குடமுனிவ**ரின் ஆச்சிரமத்தை அடைந்து, அம்முனிவரைக் கண்டனர். 'காசி எவ்வளவு தூரத்தில் உள்ளது?' என்று புண்டரீகர் முனிவரைக் கேட்டார். முனிவர் அது தமக்-குத் தெரியாதென்று கூறிவிட்டார். அதைக் கேட்ட புண்டரீகர் முனிவரை மிகவும் இழி-வாக நினைத்தார்.

அன்று நடு நிசியில் கோரமான உருவத்-துடன் மூன்று பெண்டிர் முனிவரது ஆச்சிர-மத்தில் நுழைந்து, உள்ளே இருந்த குப்பை-களை அகற்றி, மெழுகிக் கோலமிட்டனர்;

பின்னர், அழகிய உருவத்தோடு வெளியில் வந்தனர். அவர்களைக் கண்டார் புண்டரீகர்; 'பெண்களே, கோரமான உருவத்துடன் உள்ளே சென்ற நீங்கள், அழகிய உருவம் பெற்று வருகிறீர்களே! அவ்வுருவத்தை எப்படிப் பெற்றீர்கள்?' என்று அவர்களை வினவினர்.

அவர்களுள் ஒருத்தி அவரை நோக்கி, 'அடா பாவி, நல்லவர்கள் வெறுக்கத்தக்க கொடியவன் நீ; பெற்றோர்களைக் காப்பாற்றாத சண்டாளன். எங்கள் முன் நீ வருதல் தகு-மோ?' என்று கோபித்துக்கொண்டாள்.

புண்டரீகர் பயந்துவிட்டார். அவர் தாம் செய்த கெட்ட காரியங்களை நினைத்து வருந்-தினார்; பின்பு அப்பெண்ணின் பாதங்களில் வீழ்ந்து, தம்மை மன்னிக்குமாறு வேண்டினார். அவள் அவரை ஆசீர்வதித்து, 'நானும் மற்-றைப் பெண்களும் புண்ணிய நதிகளின் வடி-வாயிருக்கும் தெய்வ மாதர்கள். நீராடிச் செல்லும் மக்களின் பாவங்கள் எங்களைச் சேர்கின்றன. அதனால், நாங்கள் கோரமான ரூபத்தை அடைகிறோம். நாங்கள் இவருக்குப் பணி செய்வதால் எங்கள் பாவங்கள் நீங்கு-கின்றன. அதனால், நாங்கள் தினந்தோறும் அழகிய உருவமும் பெறுகிறோம்,' என்றாள்.

அம்மங்கை கூறிய வார்த்தைகளைக் கேட்ட புண்டரீகர், 'அம்மணி, சிறந்த தெய்வங்களான நீங்கள் இவரை வணங்குவதேன்? இவருக்கு வேலை செய்வது ஏன்?' என்று கேட்டார்.

அவள், 'அன்பனே, இப்பெரியார் வயது முதிர்ந்த தம் தாய் தந்தையரையே தெய்வமாகக் கொண்டாடி வருகிறார். அவர்கள் அடியால் இட்ட வேலையை இவர் தமது முடியால் செய்து முடிக்கிறார். அதனால், இவர் பெருந்தவம் உடையவரானார். கடவுளை வணங்குவதும், புண்ணிய நதிகளில் நீராடுவதும் பெரியார்களைக்காணுவதும் ஆகிய இவற்றால் ஒருவன் அடையும் பயனைவிட, தன் தாய் தந்தையரை ஒரு முறை வணங்குவதால் அடையும் பயன் மேலானதாகும். ஆதலால், தாய் தந்தையரை வணங்கிக் காப்பாற்றுபவரே உலகில் சிறந்த உத்தமர். அத்தகைய பெரியார் இம்முனிவர். ஆதலால், இவருக்கு நாங்கள் பணி செய்து, எங்கள் பாவங்களை நீக்கிக்கொள்கிறோம்,' என்றாள்.

**கேள்விகள் :**

1. புண்டரீகர் என்பவர் யார்?
2. புண்டரீகரின் பெற்றோர் ஏன் வேற்றிடம் சென்று உயிர்விடத் தீர்மானித்தனர்?

3. புண்டரீகர் குக்குட முனிவரை ஏன் இழிவாக நினைத்தார்?
4. குக்குட முனிவரின் ஆச்சிரமத்துக்கு வந்த மூன்று பெண்டிர் யாவர்?
5. வினவிய புண்டரீகர்க்குக் கோபங்கொண்ட பெண் கூறியது என்ன?
6. பாதங்களை வணங்கி வேண்டிக்கொண்ட புண்டரீகர்க்கு அப்பெண் கூறிய மொழி யாது?
7. குக்குட முனிவரைப்பற்றித் தெய்வப் பெண் கூறியது என்ன?
8. புண்டரீகர் கதையால் நீ அறிந்துகொண்ட நீதி யாது?

## 2. புண்டரீகர்—II

புண்டரீகர், 'அந்தோ! யான் என் தாய் தந்தையரை அடித்து வசை மொழிகளைப் பகர்ந்தேனே! அவர்கள் மனம் நோகும்படி நடந்தேனே! ஐயோ! வயது முதிர்ந்த அவர்கள் நடந்து வர, பாவியாகிய யான் குதிரை மேல் ஏறி வந்தேனே! என்னைப் போன்ற பாவியுளனோ! புண்ணிய தலங்களைப் பூசிப்பது மேலானது என்று எண்ணியல்லவோ காசிக்கு வந்தேன்! என்னே என் அறிவீனம்!' என்று பெரிதும் வருந்தினார்.

அவர் படுந்துன்பத்தைக் கண்ட அத்தெய்வமங்கை, 'அப்பா, உன் தாய் தந்தையரிடம் நீ இக்கணமே சென்று, அவர்கள் மல-

ரடிகளில் வீழ்ந்து மன்னிப்புப் பெற்றுக் கொள்; இனியாவது, அவர்கள் மனம் நோகா வண்ணம் நடந்துகொள். பெற்றோர்களைப் பூசிப்பதால், நீ பெரும்பயனை அடைவாய்; இம்மை மறுமை நலன்களைக் குறைவில்லாமல் பெறுவாய்; சிறிது காலத்திற்குள் கடவுள் அருளைப்பெறுவாய்,' என்று கூறிப்போயினள்.

பின்னர், புண்டரீகர் குக்குடமுனிவரை வணங்கினர். அம்முனிவர் அவரை அன்புடன் ஆசீர்வதித்தார். புண்டரீகர் தம் தாய் தந்தையரை அடைந்து, அவர்கள் மலரடிகளில் வீழ்ந்து வணங்கினர்; தாம் செய்த பிழைகளை மன்னிக்குமாறு வேண்டினர். பெற்றோர் மனம் மகிழ்ந்து, 'எங்கள் செல்வமே, உனக்கு நற்புத்தி வந்ததைப்பற்றி நாங்கள் சந்தோஷப்படுகின்றோம்!

தாய் தந்தையர்க்கு நற்குணம் வாய்ந்த பிள்ளைகளே சிறந்த செல்வம். நீ நீடிய ஆயுளைப்பெற்றுச் சுகமாக வாழ்வாயாக!' என்று ஆசி கூறினர்.

புண்டரீகர், தம் பெற்றோரைத் தாமும் தம் மனைவியும் ஏறி வந்த இரு புரவிகள் மீது ஏற்றி, தம் மனைவியுடன் கால் நடையாகச் சென்றனர். எல்லாரும் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, முடிவில் ஊரை அடைந்-

தனர். புண்டரீகர் தம் பெற்றோர்களின் மனக்குறிப்பை அறிந்து ஏற்ற பணிவிடை-களைச் செய்து வந்தார். அவரை அந்நகரத்-தார் எல்லாரும் புகழ்ந்தனர்.

ஒரு நாள் அவர் தம் பெற்றோர்க்கு வேலை செய்து கொண்டிருக்கையில், புண்டரீகர் என்-னும் பெயருடைய கடவுள் அங்குத்தோன்-றினர். பகவான் வந்திருத்தலை அறிந்தும், புண்டரீகர் அவருக்கு உபசாரம் செய்யாமல் ஒரு செங்கல்லை விட்டெறிந்து, 'சுவாமி, அதன்மேல் நின்றுகொண்டிரும்; சீக்கிரம் வருகின்றேன்,' என்று கூறிவிட்டுத் தம் பெற்றோர்க்கு வேண்டியவேலையைச் செய்-தார். பெருமான், அவரது செயலுக்கு வியந்து அன்பு கொண்டு அவரை ஆசீர்வதித்துச் சென்றார்.

**கேள்விகள் :**

1. தெய்வப் பெண் முனிவரைப்பற்றிக் கூறியதும் புண்டரீகர் அடைந்த வருத்தம் என்ன ?
2. புண்டரீகர் படும்துன்பத்தைக் கண்டு தெய்வ மங்கை கூறியது என்ன ?
3. குக்குட முனிவரை வணங்கியபின் புண்டரீகர் என்ன செய்தார் ?
4. தம்மை வணங்கிய மகனுக்குப் பெற்றோர் கூறிய ஆசி மொழி என்ன ?
5. பெற்றோர்க்கு வேலை செய்து கொண்டிருக்-கையில் வந்த கடவுளை எப்படி உபசரித்தார்?

6. பெற்றோர்க்குப் பணிவிடை செய்து வந்த புண்டரீகர் பெற்ற பலன் யாது?

## 3. நாய் காட்டிய வீரச்செயல்

ஒரு சண்டைக் கப்பல், பல பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு துறை முகத்தை விட்டுப் புறப்பட்டது. அதில், பணக்காரர் ஒருவரும், ஒரு வியாபாரியின் மனைவியும், அவள் குழந்தையும், அக்குழந்தையின் செவிலித்தாயும் ஏறினர். வர்த்தகன் மனைவி தன் தாய் வீட்டிற்குப் போகப் பிரயாணமானாள். அவள் தன் குழந்தைமேல் அதிக அன்புடையவள். அவளுக்கு இருந்தது ஒரே குழந்தை. அதனால் அவள் அதைத் தன் உயிரினும் மேலாகக் காப்பாற்றி வந்தாள்.

ஒரு நாள் அக்கப்பல் ஒரு நகரத்தின் துறைமுகத்தை அடைந்தது. அந்நகரத்தின் விநோதங்களைப் பார்ப்பதற்குச் செவிலித்தாய் குழந்தையை எடுத்துக் கொண்டு கப்பலை விட்டு இறங்கினாள். அப்போது அவள் கையிலிருந்த குழந்தை தவறி நீரில் விழுந்து, மறைந்து விட்டது.

குழந்தை விழுந்ததால் கப்பலில் குழப்பம் உண்டாயிற்று. உடனே நீரில்குதித்துக் குழந்தையை எடுப்பவர் ஒருவரும் இல்லை. அக்குழப்பத்தைக் கண்ணுற்ற பிரபு அங்கு வந்-


EASTERN
STUDIO

தார். அவருடன் அவர் நாயும் வந்தது. கனவான் நீரில் விழுந்த குழந்தை அணியும் சட்டை ஒன்றைக் கேட்டார். செவிலித்தாய் உடனே ஒரு சட்டையை எடுத்துக்கொடுத்தாள். அவர், அச்சட்டையையும் குழந்தை விழுந்த இடத்தையும் நாய்க்குக் காட்டி ஒரு சைகை செய்தார். உடனே நாய் நீரில் குதித்து மூழ்கிவிட்டது. நெடு நேரம் வரையில் நாயைக் காணவில்லை. அந்த நாயும் குழந்தையும் நீரில் இறந்து விட்டன என்றே யாவரும் எண்ணினர்.

பின்பு கரையில் இருந்த சிலர், 'குழந்தையின் பிணத்தையாவது எடுத்து வரலாம்,' என்று எண்ணிப் படகுகளில் ஏறிப் புறப்பட்டனர்; அவ்வாறு புறப்பட்டுப் போகும்போது, சிறிது தூரத்திற்கு அப்பால், பிரபுவின் நாய் ஏதோ ஒன்றைக் கவ்விக்கொண்டு மேலே வருவதைக் கண்டனர்; உடனே, அதிக வேகமாகப் படகுகளைச்செலுத்தி அந்நாயினருகில் சென்றனர். நாய், தன் வாயில் இருக்கும் குழந்தையின் கனத்தால், மெல்ல மெல்ல நீந்திக்கொண்டு வந்தது. படகில் இருந்தவர்கள் நாய் நீந்தும் இடத்திற்குச் சென்று நாயையும் குழந்தையையும் படகில் ஏற்றிக்கொண்டார்கள்.

சிறிது நேரத்திற்குள் படகுகள் கரையை அடைந்தன. குழந்தை உயிருடன் இருந்தது. அதனைக் கண்ட வர்த்தகன் மனைவி ஆனந்தம் அடைந்தாள்; தன் உயிரினும் இனிய குழந்தையைக் காப்பாற்றிய நாயைத் தன் இரு கரங்களாலும் அன்புடன் எடுத்து அணைத்துக்கொண்டாள்; அந்த நாய்க்குத் தான் என்ன உபகாரம் செய்வது என்பதை அறியாமல் தயங்கினாள்.

பின்பு, அவள் அந்நாய்க்கு உரிய பிரபுவை அடைந்து, 'கனவானே, ஆபத்தில் உதவி புரியும் அருங்குணச் செல்வரே, என் குழந்தையைக் காப்பாற்றிய இந்நாய் என்னிடமே இருக்கவிடுவீரா? என் சொத்தில் பாதியை இந்நாய்க்குப் பதிலாக உமக்குத் தருகின்றேன்,' என்று பணிவுடன் கேட்டனள்.

கனவான், அம்மங்கை தம் நாயின்மேல் கொண்ட ஆசைக்காகச் சந்தோஷம் அடைந்தாரென்றாலும், தம் நாயைக் கொடுக்கவிரும்பவில்லை. அவர், 'அம்மா, எனக்கு இந்த உலகத்தையே கொடுத்தாலும், இந்த நாயைக் கொடேன்; உமக்கு உமது குழந்தை எவ்வளவு சிறந்ததோ, அவ்வளவு இந்த நாய் எனக்குச் சிறந்தது,' என்றார்.

நாயும் அவர்கள் பேசியதை அறிந்துகொண்டது. 'எங்கள் இருவரையும் பிரிக்க

முடியவே முடியாது!' என்று குறிப்பால் உணர்த்துவது போல அது குரைத்தது.

வர்த்தகன் மனைவி நாயின் அன்பையும் கனவான் அன்பையும் பெரிதும் பாராட்டினள். பின்பு அவள் கனவானுக்கு வந்தனம் அளித்து, மகிழ்ச்சியுடன் சென்றாள்.

### கேள்விகள் :

1. ஒருநாள் துறைமுகத்தில் வந்து தங்கிய கப்பலில் உண்டான குழப்பம் என்ன ?
2. நீரில் விழுந்துவிட்ட குழந்தையை எடுக்கக் கப்பலில் உள்ளவர் என்ன செய்தனர் ?
3. நீரில் விழுந்து மறைந்த குழந்தை எப்படிக் காப்பாற்றப்பட்டது ?
4. குழந்தையைக் கொண்டுவரச் சென்ற நாய் எவ்வாறு கரையை அடைந்தது ?
5. தன் குழந்தை நாயால் காப்பாற்றப்பட்டதை அறிந்த வர்த்தகன் மனைவி என்ன செய்தாள்?
6. நாயைக் கொடுக்கும்படி கேட்ட குழந்தையின் தாய்க்குக் கனவான் கூறியது என்ன ?
7. நாய் செய்த செயல் என்ன ?

## 4. ஓர் அரிய செயல்

வியாபாரி ஒருவன் அளவிறந்த பொருள் சம்பாதித்தான். அவனுக்கு மூன்று குமாரர் இருந்தனர். அம்மூவரையும் கல்வியிலும் வாணிபத்திலும் வல்லவர்களாகச் செய்வித்தான் தந்தை. அவன், தான் இறக்கும் காலம்

சமீபித்துவிட்டதை உணர்ந்தான்; ஆதலால், தன் திரண்ட செல்வத்தைத் தன் மூன்று பிள்ளைகட்கும் பகிர்ந்து கொடுத்தான்; விலையுயர்ந்த ஓர் இரத்தினத்தைமட்டும் தான் வைத்துக்கொண்டான். ஒரு நாள் அவன் தன் மூன்று குமாரர்களையும் அழைத்து, 'என் அருமைச் செல்வர்களே, இன்று முதல் மூன்று மாதங்களுள் உங்களுள் எவன் ஒருவன் பிறர் செய்தற்கு அரிய செயலைச் செய்து முடித்து என்னிடம் சொல்லுகின்றானோ, அவனே என்னிடம் உள்ள மாணிக்கத்தை அடைவான்,' என்று மொழிந்தான்.

நாட்கள் கழிந்தன; மாதங்கள் மறைந்தன. ஒரு நாள் மூன்று பிள்ளைகளும் தந்தையிடம் சென்றார்கள். மூத்தவன் தன் தந்தையை நோக்கி, 'அப்பா, எனக்கு அறிமுகமில்லாத ஒருவன் தன் திரளான பொருளை என்னிடம் கொடுத்து வைத்திருந்தான். பல நாட்கள் கழிந்த பின்னர், அவன் தன் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி என்னைக் கேட்டான். அவன் என்னிடம் பணம் கொடுத்த போது, சாட்சியில்லை; கொடுத்ததை உண்மைப்படுத்தக் கடிதமும் இல்லை. ஆதலால், அவன் பணத்தைக் கேட்ட போது நான் 'இல்லை' என்று சொல்லியிருந்தால், அவனால் என்னை ஒன்றும் செய்ய இயலாது.

அப்படிச்செய்வது நியாயம் அன்று என்பதை நான் அறிவேன்; ஆதலின், அவன் பணத்தைக் கேட்ட போது, கொடுத்துவிட்டேன். அவன் எனது மேலான குணத்தை எண்ணிச் சந்தோஷம் அடைந்தான்; எனக்குச் சில பரிசுகள் தந்தான். அவற்றையும் யான் பெற மறுத்துவிட்டேன். இது மேன்மையான அரிய செய்கையல்லவா?' என்று கேட்டான்.

அதைக்கேட்ட தந்தை தன் மகனைப் புன்முறுவலோடு நோக்கி, 'மைந்த, நீ செய்தது நியாயமான செய்கை. மக்கள் நல்ல வழியிலிருந்து தீய வழியிற்புகுந்தால் பாவம் அடைவார்கள். பாவத்திற்கு அஞ்சி நீ பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டாய். ஆகவே, நீ செய்தது அரிய செயல் அன்று,' என்று கூறினன்.

இரண்டாம் மைந்தன் தந்தையை நோக்கி, 'அப்பா, ஒரு நாள் நான் ஓர் ஏரி கரைமேல் நடந்து சென்றுகொண்டிருந்தேன். அக்கரையின்மீது விளையாடிக்கொண்டிருந்த சிறுவருள் ஒருவன் தவறி, ஏரியில் விழுந்துவிட்டான். அவன் விழுந்ததைப் பலர் பார்த்திருந்தனர். ஆயினும், ஒருவராவது ஏரியில் குதித்து அச்சிறுவனைக் காப்பாற்ற முற்படவில்லை; நான் என் உயிரைப் பொருளாக

நினைக்கவில்லை; உடனே ஏரியில் குதித்தேன்; அச்சிறுவனை எடுத்துக்கொண்டு கரையேறி-னேன். சிறுவன் பெற்றோர்கள் என்னைப் பெரிதும் புகழ்ந்தார்கள். யான் செய்த செயல் மேன்மையானதல்லவா?' என்றான்.

வணிகன் அவனை நோக்கி, 'பிள்ளாய், உலகில் பிறந்தவர் அனைவரும் அருளோடு இருக்க வேண்டும். அருள் இல்லாதவர்களை மக்கள் என்று சொல்ல இடம் இல்லை. அருள் உடையவனாயிருந்ததால், நீ அச்சிறுவனைக் காப்பாற்றினாய். நீ செய்ததும் அரிய செயல் அன்று,' என்றான்.

மூன்றாம் தனயன் தந்தையை நோக்கி, 'அப்பா, நான் ஒரு நாள் இரவில் வெளியே போய்க்கொண்டிருந்தேன். காரிருள் எங்கும் கவிந்துகொண்டிருந்தது. எதிரில் மனிதர் நிற்பதும் தெரியவில்லை. அந்நள்ளிருளில் எனக்குச் சன்மப் பகையாளி ஒருவன் மலையின் உச்சியில் படுத்து அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். அவன் தூங்குவதைக் கண்டேன் யான். அவன் சிறிது அசைந்தால், உடனே பெரிய பள்ளத்தில் விழுந்து மடி-வான். எவ்வாறாயினும் அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்-டாகியது. உடனே, யான் அம்மலையினுச்-

சியை அடைந்தேன்; வெகு சாக்கிரதையாக என் பகையாளியை எழுப்பினேன். அவன் வேறோர் இடத்திற்சென்று படுக்கும்படி ஏற்பாடு செய்தேன். யான் செய்தது அரிய செயல் அன்றோ?' என்று வினவினன்.

தந்தை மிகுந்த களிப்புற்று, 'என் அருமை மைந்தனே, நீ செய்ததுதான் அரிய செயல். பகைவனைக் காப்பாற்றிய நீயே என் இரத்தினத்தைப் பெறத் தகுந்தவன்!' என்று கூறி, இரத்தினத்தை அவனுக்குக் கொடுத்து ஆசீர்வாதம் செய்தனன்.

### கேள்விகள் :

1. வியாபாரி தன் திரண்ட செல்வத்தை எவ்வாறு பகிர்ந்து கொடுத்தான் ?
2. வியாபாரி தன்னிடம் இருந்த இரத்தினத்தை என்ன செய்தான் ?
3. மூன்று பிள்ளைகள் செய்த செயல்கள் யாவை ?
4. மூன்று பிள்ளைகள் செய்த செயல்களில் அரிய செயல் எது ? எப்படி ?
5. மற்ற இரு பிள்ளைகள் செய்த செயல்களைப் பற்றித் தந்தையார் கூறியவற்றை எழுது.
6. மூன்றும் தனயன் செய்த செயலை தந்தை எப்படிப் பாராட்டினர் ?


EASTERN
STUDIO

# 5. நம்பிக்கைத் துரோகம்

இங்கிலாந்து தேசத்தில் **ஜேம்ஸ்** என்ற வர்த்தகன் ஒருவன் இருந்தான். அவன் மிக-கவும் நல்லவன்; ஒருவரையும் மனம் நோகும்-படி பேசமாட்டான்; நம்பினவரை மோசம் செய்ய மாட்டான். அவனுக்குப் '**பட்லர்**' என்ற ஒரு நண்பன் இருந்தான். அவன் மிக-வும் கெட்டவன்; ஆனாலும், தன்னை நல்லவன் என்று உலகத்தார் மதிக்கும்படி நடந்து வந்தான்.

ஒரு நாள் ஏதோ அவசர காரியமாக ஜேம்ஸ் வெளி நாட்டுக்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. அவன், ஒரு வேங்கை மரத்தடியில் பட்லரைச் சந்தித்து, தன் பொருள்களையெல்-லாம் அவனிடம் கொடுத்து, தான் திரும்பி-வரும் வரையில் அவற்றைக் காப்பாற்றும்படி அவனை வேண்டினன். பட்லரும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

ஆறு மாதங்கள் கழிந்த பின்னர், வர்த்த-கன் இங்கிலாந்தை அடைந்து, தன் நண்ப-னைக் கண்டான்; தன் பொருள்களைத் தரு-மாறு அவனை வேண்டினன். பட்லர் அவனைப் பார்த்து, 'என்ன! உன் பொருள்களா! உனக்-கென்ன பைத்தியமா? நான் உன்னை இது

வரையில் பார்த்ததேயில்லையே! இஃது என்ன கொடுமை!' என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஜேம்ஸ், இடியோசை கேட்ட நாகம் போல நடுங்கினான். 'ஐயா, என்ன! என்னை நீ அறியாயா? நான் வெளிநாட்டுக்குச் செல்லும்போது அந்த வேங்கைமரத்தடியில் என் பொருள்களை உன்னிடம் கொடுக்கவில்லையா? என்னை மோசம் செய்யப் பார்க்கின்றாயே! வெகு நன்று! மரியாதையாக என் பொருள்களைக் கொடுத்தால் விடுவேன்; அல்லாவிடின், இந்நகர நீதிபதியிடம் சென்று, உன் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்துவேன்!' என்று வருத்தத்துடனும் கோபத்துடனும் சொன்னான்.

ஜேம்ஸ் கூறிய மொழிகளைக் கேட்ட பட்லர், 'ஐயா, நீ போய் நீதிபதியிடம் முறையிட்டுக்கொள். அதைப்பற்றி நான் கவலைப்பட வேண்டுவதில்லை. நீ 'கொடுத்தேன்,' என்கிறாய். நான் 'கொடுக்கவில்லை,' என்கிறேன். நீ என்னிடம் கொடுத்ததற்குச் சாட்சியும் இல்லை. உன் வார்த்தையை யார் நம்புகிறார் பார்ப்போம்!' என்று கூறிப் பரிகாசம் செய்தான்.

ஜேம்ஸ் மனம் கொதித்தது; கண்களில் நீர் தாரை தாரையாய் வடிந்தது. அவன்

நீதிபதியிடம் சென்று தன் வழக்கைக் கூறி-ஞன்; தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று நீதிபதியை வேண்டிக்கொண்டான்.

நீதிபதி ஒரு சேவகனை அனுப்பி, பட்லரை அழைத்து வரச் சொன்ஞர். உடனே பட்லர் வந்து நீதிபதியை நமஸ்கரித்து நின்ருன். நீதிபதி அவனை நோக்கி, 'ஐயா, நீர் மிகவும் நல்லவரைப் போலக் காணப்படுகிறீர். இவர் யார்? இவரை உமக்குத் தெரியுமா? இவர் பொருள்களை வாங்கியதுண்டா?' என்று வினவினர்.

**பட்லர்:** பிரபுவே, இவர் யார் என்பது எனக்குத் தெரியாது. என்னிடம் இவர் பொருளைத் தரவில்லை. இவர் தவறுதலாக வந்து என்னைப் பிடித்துக்கொண்டார்.

**நீதிபதி:** ஜேம்ஸ், நீர் இவருக்கு எந்த இடத்தில் பொருளைக் கொடுத்தீர்?

**ஜேம்ஸ்:** பிரபுவே, ஒரு வேங்கை மரத்-தடியில் கொடுத்தேன்.

**நீதிபதி:** நீர் அதை இவரிடம் கொடுக்-கையில் யாராவது பார்த்ததுண்டா?

**ஜேம்ஸ்:** ஒருவரும் பார்க்கவில்லை. இவர் இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்வா-ரென்று யான் கனவிலும் நினைக்கவில்லை.

ஆதலால், நான என் பொருளை ஒருவர் முன்னிலையிலும் கொடுத்துச் செல்லவில்லை.

**நீதிபதி:** 'ஐயா, நீர் பொருளைக் கொடுத்ததாகச் சொல்லுகிறீர். இவரோ, வாங்கவில்லை என்கிறார். நீர் கொடுத்ததை நிரூபிக்கச் சாட்சியும் இல்லை. நீ எந்த மரத்தின் அடியில் இருந்துகொண்டு உம் பொருளைக் கொடுத்தீரோ, அந்தமரத்தையாவது இங்கு அழைத்து வாரும்,' என்று கூறி, ஏதோ சமிக்கை செய்தார்.

உடனே ஜேம்ஸ் வெளியே சென்றான். ஒரு மணி நேரம் கழிந்தது. நீதிபதி பட்லரை நோக்கி, 'ஜேம்ஸ் திரும்பி வந்துகொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்,' என்றார்.

பட்லர் தன்னை மறந்தவனாய், 'ஐயா, அது முடியாது; அம்மரம் நெடுந்தூரத்தில் இருக்கிறது,' என்றான்.

உடனே நீதிபதி, 'அடா, துஷ்டா, அம்மரமிருக்கும் இடத்தைத் தெரிந்திருக்கும் நீ அவரது பொருளை வாங்கவில்லை என்று ஏன் சாதிக்கின்றாய்? உண்மையைக் கூறினால், உயிர் பிழைப்பாய்! அன்றேல், உன்னைச் சிரச்சேதம் செய்துவிடுவேன்!' என்று பயமுறுத்தினார்.

குற்றம் பொருந்திய மனமுடைய பட்லர் பயந்துவிட்டான். அவன் நீதிபதியின் கால்-

களில் வீழ்ந்து அழுதான்; தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். ஜேம்ஸ் தன்னிடம் கொடுத்து வைத்த பொருளை அவன் மீண்டும் ஜேம்ஸுக்குக் கொடுத்துவிட்டான். நீதிபதி அவனை ஐந்து வருடகாலம் கடுங்காவலில் வைத்தார்.

**கேள்விகள் :**

1. ஜேம்ஸ் என்ற வர்த்தகன் நீதிபதியிடம் கொடுத்த வழக்கு யாது?
2. பட்லர் நீதிபதி கேட்டபோது கூறிய பதில் என்ன?
3. நீதிபதி ஜேம்ஸ் பொருளை எவ்வாறு பட்லரிடம் இருந்து பெற்றார்?
4. ஜேம்ஸ் பட்லர் பாடத்தால் நீ அறிந்துகொள்ளும் நீதி என்ன?

## 6. உத்தம சகோதரன்

**நெடுஞ்சேரலாதன்** என்னும் அரசன் சேர நாட்டை ஆண்டு வந்தான். அவன் செங்கோல் மன்னன். அம்மன்னன் எல்லா அரசர்களையும் வென்று, அரசர்க்கு அரசனாய் விளங்கினான். அவன் மனைவி **நற்சோணை** என்பவள். அவளுக்கு இரண்டு மைந்தர்கள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் **செங்குட்டுவன்;** இளையவன் பெயர் **இளங்கோ.** அவ்விருவரையும் சேரலாதன் மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தான்.

ஒரு நாள் அரசன் இரு பிள்ளைகளையும் தனக்கு இரு புறங்களிலும் உட்காரவைத்துத் தான் அவர்களுக்கு மத்தியில் ஓர் ஆசனத்தில் கொலுவீற்றிருந்தான். அப்போது அங்கு ஒரு சோதிடன் வந்து அரசனைப் பணிந்தான். அவன் இரு சிறுவர்களையும் கூர்ந்து பார்த்தான். பிறகு, அவன் அரசனை நோக்கி, 'அண்ணலே, இவ்விருவருள் இளைய பிள்ளையே பட்டத்திற்குரிய இலட்சணங்கள் பொருந்தியவன். அவனிடம் நாட்டை ஒப்புவிப்பீர்களானால், நாடு செழித்தோங்கும். மூத்தவனிடம் ராஜலட்சணங்கள் காணப்படவில்லை,' என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட செங்குட்டுவனது முகம் வாடியது. இளங்கோவின் கண்கள் சிவந்தன. அவன் கோபத்தால் பற்களைக் கடித்தான். அவன் சோதிடனைப் பார்த்து, 'அறிவற்ற சோதிடனே, நீ சிறிதும் யோசிக்காமல் இதைச் சொல்லிவிட்டாய். உத்தம அரசர் மரபில் உதித்த நாங்கள் அவ்வாறு முறை தவறிய காரியம் செய்யோம். தசரதமைந்தனாகிய உத்தம பரதன் பட்டமேற்றானா? மூத்தவன் இருக்க இளையவன் பட்டம் அடையலாமா? சகோதர வாஞ்சையற்ற பாவிகள் அல்லவோ அவ்வாறு செய்வார்கள்? என்னையும் என் உத்தம சகோதரரையும் பகையாக்-

கவோ நீ இவ்வார்த்தைகளைச் சொன்னுய்? உனது நாவை இப்போதே அறுத்தெறிவேன்!' என்று கூறிக் கோபித்தெழுந்தான்.

சேரலாதன் அவனது கோபத்தை அடக்கினுன். சோதிடன் மிகவும் பயந்துவிட்டான். பின்னர், இளங்கோ சோதிடனை நோக்கி, 'சோதிடனே, நான் சொல்வதைக் கேள்: என்னிடம் அரசர்க்குரிய உத்தம லட்சணங்கள் இல்லை; துறவிக்கு வேண்டிய லட்சணங்களே உள்ளன. யான் இல்லறத்தை விரும்பவில்லை; துறவறத்தையே பெரிதும் விரும்புகின்றேன். அதுவே யான் மேற்கொள்வது. இது சத்தியம்! சத்தியம்! முக்காலும் சத்தியம்!' என்ருன்.

தன் இளைய புதல்வன் மொழிகளைக் கேட்ட தந்தை, பதைபதைததுக் கணகளில் நீர் சோர நின்ருன். பின்பு, அவன், 'என் அருமைச் செலவ, முன் பின் யோசியாமல் சத்தியம் செய்துவிட்டனையே! நான் என் செய்வேன்!' என்ருன்.

இளங்கோ, 'அப்பா, யான் ஆய்ந்து பார்த்தே சத்தியம் செய்தேன். யான் என் தமையனுருடன் இருந்தால், பல துஷ்டர் என்னை அரசனுக்க விரும்புவர். அவர்களோடு சேர்ந்து என் புத்தி மாறினும் மாறும். அப்-

போது நான், என் சகோதரர் மனம் நோகு-மாறு செய்தவனுவேன். வெள்ளம் வருவதற்-குள் அணை போட்டு வைப்பது நல்லதல்லவா? பின் வரக் கூடியவற்றை ஆலோசித்தே யான் துறவறம் மேற்கொண்டேன். என் தமையனுர் இவ்வுலக ஆட்சியைப் பெற வேண்டும் என்பதே எனது விருப்பம். நீங்கள் வருந்த-லாகாது,' என்று கூறினன்.

இளங்கோவின் மொழிகளைக் கேட்ட தந்தை அவனைக் கட்டித் தழுவினன். பின்பு அவன், 'என் அருமைக் குழந்தாய், உன் அறிவை மெச்சினேன்! நீயே உலகில் உத்தம சகோதரன்! உன்னுல் நம் மரபு மேம்பட்டது,' என்று கூறி முத்தமிட்டான்.

இவற்றை எல்லாம் கவனித்துக்கொண்-டிருந்த செங்குட்டுவன், தன் தம்பியை அணைத்துக்கொண்டான். அவனது மனம் அன்பால் குழைந்தது. அதனுல், அவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். 'என் அரு-மைத் தம்பீ, என்பொருட்டுத் துறவறம் மேற்-கொண்ட செல்வமே, நீயே உத்தம சகோ-தரன்! நீ என்னை விட்டுச் சென்றுவிடுவா-யானுல், யான் உயிர் தரியேன்! உத்தமகுண பரதனை ஒத்த நீ, என்னைவிட்டுப் பிரியாமல் இருந்து, நாட்டை ஆளவேண்டும். உன்னைத் தம்பியாகப் பெற்ற எனக்குக் குறைவு

உண்டோ!' என்று கூறிச் சந்தோஷப்பட்டான்.

இளங்கோ, அன்று முதல் '**இளங்கோ அடிகள்**' எனப்பட்டார். அவரைச் '**சேரமுனிவர்**' என்றும் சொல்லுவார்கள். அவர் தம் சகோதரன் கேட்டுக்கொண்டபடி அவனை விட்டுப் பிரியாமல் இருந்தார்.

**கேள்விகள் :**

1. நெடுஞ்சேரலாதன் யாவன்? அவன் எவ்வாறு கொலுவீற்றிருந்தான்?
2. கொலுவில் இருந்த நெடுஞ்சேரலாதனுக்குச் சோதிடன் கூறியது என்ன?
3. சோதிடனுக்கு இளங்கோ கூறிய மொழி யாது? செய்த சத்தியம் யாது?
4. இளங்கோ செய்த சத்தியத்தைக் கேட்ட மன்னன் என்ன கூறினான்?
5. துறவறம் கொண்டதற்கு இளங்கோ கூறிய காரணம் என்ன?
6. இளங்கோ அடிகளைச் சேரன் செங்குட்டுவன் எப்படிப் பாராட்டினான்?
7. இளங்கொ அடிகள் யார்? அவர்க்கு அப்பெயர் எப்படி வந்தது?
8. உத்தம சகோதரன் என்ற பெயரை இளங்கோ எப்போது பெற்றார்?

# 7. குமணவள்ளல்

முன் காலத்தில் நம் இந்தியாவில் கேட்பாருக்கு இல்லை என்னுமல் கொடுக்கும் பெரியார் பலர் இருந்தனர். அவர்கள் தங்கள் உயிரையே கேட்டாலும் தயங்காமல் கொடுக்கவல்லவர்கள். அவர்களுக்கு **வள்ளல்கள்** என்பது பெயர். அவ்வள்ளல்களுள் ஒருவன் **'குமணன்'** என்பவன். அவன் நற்குணங்களுக்கு உறைவிடம் போன்றவன். கொடையில் கன்னனை யொத்தவன் ; எக்காலத்தில் யார் வந்து எதைக் கேட்டாலும், இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் மனவலிமை படைத்தவன். பல தமிழ்ப் புலவர்கள் அவனிடம் சென்று கவி பாடிப் பொருள் பெற்றுச் செல்வார்கள். அவன் கவி வாணர்களைத் தன் உயிர் போல எண்ணி வந்தான்.

இத்தகைய நற்குணக் குன்றுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் பெயர் **இளங்குமணன்** என்பது. அவன் கல்வியறிவு இல்லாத மூடன். அவனுக்குப் பல துஷ்ட நண்பர்கள் இருந்தார்கள். அத்துஷ்டர்கள் அவனுக்குப் பல துர்ப்போதனையைச் செய்து வந்தார்கள் ; 'ஐயா, உம் தமையனுர் யாவர்க்கும் பொருளை இல்லை என்னுமல் கொடுக்கிருர். கஜானுவில் உள்ள பொருள் அனைத்தையும்

அவர் செலவழித்துவிடுவார். அவர் திடீரென இறக்க நேரிட்டால், நீர் அல்லவா அரசாள்வீர்? அப்போது நீர் பணத்திற்கு என்ன செய்வீர்? உம் சகோதரருக்குப் புத்தி சொல்லும்,' என்று கூறி வந்தார்கள்.

இளங்குமணன் தருமத்தின் பெருமையை அறியாத மூடனுகையால், தன் அண்ணன்மீது பகைமை கொண்டான்; குமணனைக் கொன்றுவிடவும் யோசனை செய்தான். இதனை அறிந்தான் குமணன். உடனே அவன் நள்ளிருளில் தன்னை ஒருவரும் அறியாதபடி காட்டிற்கு ஓடிவிட்டான்.

தனக்குப் பயந்து தன் அண்ணன் எங்கேயோ ஓடிவிட்டான் என்று இளையவன் களிப்படைந்தான்; தான் அந்நாட்டிற்கு அரசனுனன். குடிகள் அவனை வெறுத்தார்கள். அவர்கள் குமணனை நேசித்து வந்தார்கள். குமணனை மீளவும் அழைத்து வந்து நாட்டை ஆளச் செய்ய வேண்டும் என்று அவர்கள் முயன்ருர்கள்.

இளங்குமணன் தன் தமையனது தலையைக்கொண்டு வருவார்க்கு ஏராளமான பரிசு கொடுப்பதாகப் பறையறைவித்தான். 'அந்தோ! இஃது என்ன கொடுமை!' என்று குடிகள் மனம் வருந்திஞர்கள். சிலர் மூட

அரசனுக்குத் தெரியாமல் குமணனுக்கு உணவு கொடுத்து வந்தனர்.

ஒரு நாள் கவிவாணர் ஒருவர் குமணனைத் தேடிக் காட்டை யடைந்து, அவனைக் கண்டார்; கண்டு, தம் வறுமையைத் தெரிவித்தார். குமணன் தன்னிடம் பொருள் ஒன்றும் இல்லாததை நினைந்து வருந்தினன்; பின்னர்ச் சிறிது நேரம் ஆலோசனை செய்து, 'ஐய, என் தலையைக் கொண்டு வருவார்க்கு ஏராளமான பொருள் கொடுப்பதாக என் தம்பி வாக்களித்துள்ளான். ஆதலால், எனது தலையை அறுத்து எடுத்துச் செல்லும். ஏராளமான பொருள் பெறுவீர். அதனைக்கொண்டு உமது வறுமையைத் தீர்த்துக்கொள்ளும்,' என்றான்.

வள்ளல் கூறிய மொழிகளைக் கேட்ட கவிவாணர் மனம் நொந்தார். அவர் அவனை வெட்டத் துணிவரோ! ஒருபோதும் துணியாரல்லவா? அவர் ஓர் உபாயம் செய்தார் : ஒரு செவ்வாழைக் கிழங்கை எடுத்துக் குமணன் தலை போலச் செய்தார்; சிறந்த சிற்பியால் அதற்கு வர்ணமிடுவித்தார்; பின்னர் அதனை எடுத்துக்கொண்டு இளங்குமணனிடம் சென்றார்.

தன் சகோதரன் தலையைக் கண்டான் இளங்குமணன். கண்டதும், அவனது உடம்பு



நடுங்கியது; கண்களிலிருந்து நீர் அருவி போலப் பாய்ந்தது. புலவர் கொண்டு வந்தது பொய்த்தலை என்பது விளங்கியதும், அவன் அப்புலவரை நோக்கி, 'ஐய, என் அண்ணனை உயிருடன் நீர் கொண்டு வந்தால், உமக்கு இப்போது சொன்ன திரவியத்தைவிட இரண்டத்தனை தருவேன்,' என்று கூறினன்.

கவிவாணர் உடனே காட்டிற்கு ஓடினுர். குமண வள்ளலிடம் நடந்ததை நவின்ருர். குமணன் பெருங்களிப்படைந்தான். பாவலர் குமணனை அழைத்துச் சென்ருர். இளங்குமணன் தன் அண்ணன் கால்களில் வீழ்ந்தான்; தான் செய்த மூடச் செயலுக்காகத் தன்னை மன்னிக்கும்படி வேண்டினுன்; அரசை அண்ணனுக்கே தந்தான். அன்று முதல் அவன் துட்டர்களோடு சேருவதை ஒழித்துவிட்டான். அவன் தன் சகோதரனிடம் இருந்துகொண்டு அவனது வேலைகளைப் பார்த்து வந்தான். பாவலர் பொருள் பெற்றுச் சென்ருர்.

**கேள்விகள்:**

1. குமண வள்ளலின் குணம் என்ன?
2. இளங்குமணனுக்கு அவனுடைய நண்பர்கள் கூறி வந்தது என்ன?
3. குமணவள்ளல் ஏன் ஒருவரும் அறியாதபடி காட்டிற்கு ஓடினுர்?

4. இளங்குமணன் மன்னன் ஆனதும் செய்தது யாது?
5. காட்டை அடைந்த கவிவாணர்க்குக் குமண வள்ளல் கூறியது என்ன?
6. காட்டை அடைந்த குமண வள்ளல் மீண்டும் எப்படி மன்னர் ஆனுர்?

## 8. அடக்கமுள்ள அரசன்

அடக்கத்தை ஆபரணமாகப் பூண்டவர்களே மேலானவர்கள். அவர்கள் உலகத்தில் நல்லாரால் போற்றப்படுவார்கள். முன் ஒரு காலத்தில் 'இராபர்ட்டு' என்பவர் ஒருவர் இருந்தார். அவர் நார்மன் வர்க்கத்தைச் சேர்ந்தவர். அவர் அடக்கம், பொறுமை, உண்மை, வீரம் முதலிய நற்குணங்கள் வாய்ந்தவர். அவர் நற்குணங்களை உலகத்தில் இருந்த அரசர் யாவரும் அறிந்தனர். அவர் ஏழைகளிடத்தும் பிரபுக்களிடத்தும் வித்தியாசம் பாராட்டுவதில்லை. அவர் எப்பொழுதும் எளிய உடையே உடுத்துக்கொண்டிருப்பார். அவர் அரசர் என்பது பலருக்குத் தெரியாது. அவர் பல சந்தர்ப்பங்களில் தம் நற்குணங்களைச் செய்கைகளின் வாயிலாக உலகத்திற்கு அறிவித்துள்ளார். அவரது பெருமையைக் கிரேக்க நாட்டரசன் கேள்வியுற்றுன். ஜனங்கள் அவரைப்பற்றிச் சொல்வன எல்லாம்

உண்மையா என்பதை அறிய அந்த மன்னன் ஆசைப்பட்டான்.

அவன், ஒரு நாள் தன் அரண்மனையில் நடக்கும் விருந்திற்கு இராபர்ட்டை வரவழைத்தான். எல்லாக் கனவான்களும் சென்றிருந்தார்கள். அரசன் வேண்டுகோளின்மேல், விருந்திற்கு வந்த யாவரும் ஆசனங்களில் அமர்ந்தார்கள். ஆனால், இராபர்ட்டுத் துரைக்கு ஓர் ஆசனமும் இல்லை. மேலும், இராபர்ட்டும் அவர் வீரர்களும் வந்தால், அங்குள்ளவர் எல்லாரும் அவர்களைக் கவனியாதவர் போல இருந்துவிட வேண்டும் என்றும் கிரேக்க அரசன் கூறியிருந்தான்.

விருந்து ஆரம்பமாகும் நேரத்தில் இராபர்ட்டும் அவர் மெய்காப்பாளரும் அரண்மனையில் நுழைந்தனர். அங்கே ஓர் ஆசனமாவது காலி இல்லாதிருப்பதை இராபர்ட்டுக் கண்டார். தவிர, அவரை ஒருவரும் அங்கே கவனிக்கவில்லை; அவருக்கு ஓர் ஆசனம் கொடுப்பாரும் இல்லை. உடனே அவர் ஒன்றும்பேசாது நேராக அந்த அறையின் மூலைக்குச் சென்று, தாம் அணிந்து வந்த விலையுயர்ந்த மேலங்கியைக் கழற்றி, நன்றாகச் சுற்றி, அதைக் கீழே வைதது, அதன்மேல உட்கார்ந்துகொண்டார். அவர் மெய்கர்ப்பாளரும் தம் அரசர் செய்தவாறே செய்தனர்.

இவ்விதமாய் ஒருவித ஆடம்பரமுமில்லாமல் அவர்கள் அமைதியுடன இருந்து விருந்து உண்டார்கள். உண்ணும்போது அவர்கள்

முகத்தில் கோபக் குறியாவது அதிருப்திக் குறியாவது காணப்படவில்லை. எல்லாரும் அதிக சந்தோஷத்துடனே உண்டனர்.

விருந்து முடிந்தது. இராபர்ட்டு அரசரும் அவர் மெய்காப்பாளரும் எழுந்தனர். பின்பு அவர்கள் அங்குக் கூடியிருந்தவர்களிடம் விடைபெற்று நடந்து சென்றார்கள். அவர்கள் கழற்றி வைத்த விலையுயர்ந்த மேலாடைகள் அவர்கள் சாப்பிட்ட இடத்திலேயே இருந்தன. அவர்கள் அவற்றை எடுத்துச் செல்லவில்லை. அவர்கள் வந்தது முதல் சென்றது வரையில் அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்த கிரேக்க அரசன், மிகவும் ஆச்சரியப்பட்டான். பின்பு அவன் தன் ஆட்களுள் ஒருவனை இராபர்ட்டுப் பிரபுவிடம் அனுப்பி, கீழே வைத்துவிட்ட உடைகளை அணிந்துகொள்ளச் சொன்னான். இராபர்ட்டுப் பிரபு அச்சேவகனை நோக்கி, 'நார்மன் வமிசத்தார் தாம் உட்காருவதற்கு உபயோகப்படுத்திய எப்பொருளையும் எடுத்துச் செல்லும் வழக்கம் இல்லை என்று உன் அரசனிடம் கூறு,' என்று கூறிவிட்டுச் சென்றார்.

சேவகன் கிரேக்க அரசனிடம் வந்து இராபர்ட்டுப் பிரபு கூறியதைச் சொன்னான். அதுகேட்டு அரசன் வெட்கம் அடைந்தான்; சாந்த குணமும் அடக்கமும் வாய்ந்த புண்ணிய சீலரான இராபர்ட்டுப் பிரபுவை வரவேற்று உபசரிக்காததற்காகத் தன்னையே வெறுத்துக் கொண்டான்.

**கேள்விகள் :**

1. இராபர்ட்டு அரசரின் அருங்குணங்கள் யாவை?
2. கிரேக்க நாட்டரசன் விருந்து ஏற்படுத்தியது எப்படி ?
3. இராபர்ட்டு அரசன் கிரேக்க மன்னரின் விருந்தில் எவ்வாறு நடந்து கொண்டான் ?
4. இராபர்ட்டின் அடக்கமான குணத்தைக் கிரேக்க மன்னன் எப்படி அறிந்தான் ?
5. இராபர்ட்டின் மெய்காப்பாளரைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

# 9. நல்லவர் நேசத்தால் நற்கதி பெறலாம்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் நன்று."

ஒரு காட்டில் ஓர் ஆண் புறுவும் ஒரு பெண் புறுவும் ஓர் ஆலமரத்தில் கூட்டை அமைத்து, வசித்து வந்தன. அவை இரண்டும் உடலும் உயிரும்போல ஒன்றையொன்று அன்புடன் நேசித்துவந்தன. ஒரு நாள் ஆண் புறு வழக்கம்போல இரை தேட வெளியே சென்றது.

அச்சமயம் வேடன் ஒருவன் அங்கு வந்தான். அவன் அன்று முழுவதும் அக்காட்டில் அலைந்து திரிந்து, ஒன்றும அகப்படாமையால் அந்த ஆலமரத்தடியில், அமர்ந்து, 'கடவுளே,

என்ன செய்வேன்! இன்றைக்கு உணவு ஒன்றும் அகப்படவில்லையே! என் மனைவி மக்கள் உணவின்றி வருந்துவார்களே!' என்று கூறிக்கொண்டே மரத்தை அண்ணாந்து பார்த்தான். உடனே அவன் பெண் புருவைக் கண்டு சந்தோஷம் கொண்டான். பின்பு அவன் தன் வலையை விரித்து அதனைப் பிடித்துக் கொண்டான.

சிறிது நேரத்திற்குள் கரிய மேகங்கள் வானத்தில் கவிந்தன. இடியும் மின்னலும் கலந்து மழை பொழிந்தது. வேடன்மழையில் நன்றாய் நனைந்தான். அவன் உடலும் உடையும் நனைந்தன. குளிர்ந்த காற்று வீசியது. வேடன் நடுக்குற்றுச் செயலற்றுப் பூமியில் பிணம்போல விழுந்து கிடந்தான்.

அப்போது, வெளியே இரையின்பொருட்டுச் சென்றிருந்த ஆண் புரு வந்து சேர்ந்தது; தன் பெட்டையைக் காணுமல் அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தது. அப்போது, பெண் புரு ஆண் புருவை நோக்கி, 'அன்பரே, நான் இவ்வேடனிடம் அகப்பட்டுக்கொண்டேன். என்னைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டா. இவ்வேடன் குளிரால் ஸ்மரணையற்றுக் கிடக்கின்ருன். இவனை நீர் எழுப்ப வேண்டும். இவனுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். இவன் நமக்குத் திங்கு செய்பவனுயினும், இவனை இச் சமயம் நாம் காப்பாற்ற வேண்டும். மேலும், இவன் நமது மரத்தடியில் தங்கியிருக்கிருன்.

ஆதலால், இவன் நம் விருந்தாளியாகின்றான்,' என்றது.

பெண் புறா கூறியவற்றைக் கேட்டதும், ஆண் புறா, தன் பெட்டையின் அறிவிற்குப் பெரிதும் வியந்தது. அஃது உடனே பறந்து சென்று, காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கி வந்தது; வேடனுக்கு எதிரில் அவற்றைக் குவியலாகப்போட்டது. பின்பு எங்கேயோ சென்று எரிகொள்ளி ஒன்றைக் கொண்டு வந்து குவியலில் இட்டு, தன் சிறகுகளால் விசிறித் தீ மூட்டியது. நெருப்பு நன்றாய்ப் பற்றி எரியவே, வேடன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்.

வேடன் சந்தோஷம் அடைந்தான். அவன் புறாவை நோக்கி, 'ஓ பட்சியே, என் குளிரைப் போக்கினாய். உன்னை என்றும் மறவேன்! இப்பொழுது எனக்குப்பசி அதிகமாய் இருக்கிறது. என்ன செய்வேன்! எனக்கு ஏதேனும் உணவு கொடுத்துக்காப்பாற்று,' என்றான்.

ஆண் புறா அவனைப் பார்த்து, 'ஐயா, இந்த அகாலத்தில் யான் எங்குச் சென்று இரை தேடி வருவேன்? என் இறைச்சியைத் தின்றாவது உன் பசியைப் போக்கிக்கொள்,' என்று கூறி, நெருப்பில் விழுந்து மாண்டது.

தன் பதி செய்த செயலைக் கண்ட பெண் புறா, பெருங்களிப்படைந்தது. வேடன் ஆண் புறாவின் இறைச்சியைத் தின்று பசியாறினானென்றாலும், ஆண் புறாவின் அரிய செய்கை

அவன் மனத்தை விட்டு அகலவில்லை. அவன், 'ஆ! என்ன ஆச்சரியம்! ஒரு சாதாரணப் புரு என் குளிரைப் போக்கியது! மேலும், என் பசியைத் தீர்க்கத் தன் உயிரையும் இழந்தது! அந்தோ! இத்தகைய நற்குண நற்செய்கைகள் உள்ள எத்தனையோ பறவைகளை யான் இது வரையில் கொன்று வந்தேனே!' என்று வருந்திச் சீவகாருணியம் உடையவனாய்க் கூட்டில் இருந்த பெண் புருவை எடுத்து வெளியில் விடுத்தான்.

உள்ளன்புடைய மனைவி, கணவன் மாண்டபின் உயிருடன் இரான் அல்லவா? உள்ளன்புடைய விலங்குகளும் பறவைகளும் இவ்வாறே யாம். ஆகையால், பெண் புரு, தான் உயிருடன் இருப்பது தகுதியன்று என்று எண்ணி, அந்த நெருப்பில் தானும் விழுந்தது. உடனே, அப்புருக்கள் இரண்டும் திவ்விய உடம்பு பெற்று அழகிய விமானத்தில் ஏறிச் சென்றன. இவ்விநோதத்தைக் கண்ணுற்றான் வேடன்.

உடனே அவனுக்கு நல்லறிவு உண்டாய்விட்டது. அவன், 'அந்தோ! நான் இதுவரையில் பல பாவங்களைச் செய்தேனே! கணக்கற்றவிலங்குகளையும் பறவைகளையும்கொன்று தின்றேனே! இப்புருக்கள் நட்பால் யான் புத்தி அடைந்தேன்! இனி, என் வேட்டைத் தொழிலை விட்டுவிடுவேன்; கூலி வேலை செய்தாவது வயிறு வளர்ப்பேன். சீவகாருணியமும், கடவுள் பத்தியும் உள்ளவனாய் இருப்-

பேன்,' என்று தன்னுள் தீர்மானித்துச் சென்ருன். அவன் தீர்மானித்தபடியே நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து, உயர்ந்த பதவியை அடைந்தான்.

**கேள்விகள் :**

1. பெண் புரு எப்படி வேடனுடைய கூட்டில் அகப்பட்டது ?
2. வேடனுக்கு ஆலமரத்தண்டை நேர்ந்த விபத்து என்ன ?
3. வேடன் எப்படி மூர்ச்சை தெளிந்து எழுந்து உணவு உண்டான் ?
4. தான் பிடித்திருந்த பெண் புருவை வேடன் ஏன் கூட்டிலிருந்து எடுத்து வெளியில் விடுத்தான் ?
5. விடப்பட்ட பெண் புருவின் நிலே என்ன ஆயிற்று ?
6. வேடனே உபசரித்த புருக்கள் இரண்டும் பெற்ற பலன் என்ன ?
7. புருக்கள் விமானத்தில் சென்ற விநோதத்தைக் கண்ட வேடன் செய்தது என்ன ?

# 10. திருமலே நாயகர்

தென்னுடு, தமிழ் நாடு எனவும் பெயர் பெறும். அதனைப் பாண்டி நாடு, சோழ நாடு, சேர நாடு என்று மூன்றுபிரிவுகளாகச்செய்து, பாண்டியர்களும், சோழர்களும், சேரர்களும் ஆண்டு வந்தார்கள். சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் பின்பு அவர்கள் நாட்டை நாயகர் என்ற ஒருவமிசத்தார் ஆண்டனர்.

இவர்கள் விஜயநகர வமிசத்து அரசர்கள். மதுரையில் ஆண்ட நாயகர்களுள் மிகவும் பிரபலமானவர் திருமலை நாயகர் என்பவர். இவர் வைணவர்.

திருமலை நாயகர் எம்மதத்தினரையும் பகைக்கவில்லை. இவர் காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள் இந்தியாவில் தங்கள் மதத்தைப் போதித்துப் பரவச் செய்தார்கள். கட்டடங்களைக் கட்டினார்கள். இவர் காலத்தில் குடிகள் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் பயமின்றி வாழ்ந்து வந்தார்கள்.

திருமலை நாயகர் முத்துக்கிருஷ்ண நாயகரின் புதல்வர். 'முத்து வீரப்ப நாயகர்' என்பவர் திருமலை நாயகருக்குத் தமையனார். அவர் அரசாண்ட பின்னரே இவர் அரசாண்டார். இவர் திருச்சிராப்பள்ளியைத் தலை நகரமாகக் கொண்டு ஆட்சி செய்தார்; சில காலம் கழிந்த பின்னர் மதுரையில் பெரிய அரண்மனையைக் கட்டிக்கொண்டு அதில் வசித்து வந்தார்; அப்போது மதுரை தலை நகரம் ஆயிற்று. இவர் மதுரையில் வசித்து வந்த அரண்மனைக்குத்தான் **திருமலை நாயகர் மஹால்** என்பது பெயர். இது மிக்க அழகிய வேலைப்பாடு அமைந்த கட்டடம். இதில் இப்பொழுது பலகச்சேரிகள் இருக்கின்றன.

இவர் திரண்ட பொருளைச்செலவிட்டுஅழகிய பலகட்டடங்களைக் கட்டினார்;மதுரையில் பெரிய **தெப்பக்குளம்** ஒன்றை வெட்டுவித்துப்

படித்துறைகளை அழகாக அமைத்துள்ளார்; அக்குளத்தைச் சுற்றிலும் கைப்பிடிச் சுவர்களை எழுப்பியுள்ளார். இத்திருமலை நாயகர் கோடை காலத்தில் வசிப்பதற்காக வைகையாற்றின் வடகரையில் ஒரு சிங்கார மாளிகை நிருமித்துள்ளார்; **ஸ்ரீரங்கம், அழகர் கோவில், திருப்பரங்குன்றம்** முதலான இடங்களில் அழகான பல கட்டடங்களை அமைத்தார். இவர் கட்டுவித்த கட்டடங்களில் இவர் உருவச் சிலைகள் காணப்படுகின்றன; மதுரைச் சொக்கேசர் ஆலயத்திற்கு ஏராளமான பொருள் தந்துள்ளார். அக்கோவிலில் திருமலை நாயகரின் உருவச் சிலையும் இவர் பட்டமகிஷியின் உருவச் சிலையும் இருக்கின்றன.

இவர் குடிகளது நன்மையிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தார்; குடிகளுக்குத் தம்மாலும், தம் பரிசனத்தாலும், வேற்றரசராலும், கள்வராலும், விலங்குகளாலும் உண்டாகக்கூடிய துன்பங்களைப் போக்கினார். இவர் அடக்கம், பொறுமை, உண்மை முதலிய சகல நற்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர். இவரது நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கும் இவருக்குத் தெரியும். இவர் இரவில் மாறு வேடம் பூண்டு நகரி சோதனை செய்து வந்தார். குடிகளுக்கு ஏதேனும் துன்பம் நேரிட்டால் எந்த நேரத்திலும் தம்மிடம் வந்து தெரிவிக்கலாம் என்று பறையறைவித்தார்; பிரயாணிகளுக்கும மிருகங்களுக்கும் நிழல் தரும் மரங்களைப் பாதைகளில் வைத்து

வளர்ப்பித்தார்; பாதைகளில் அங்கங்கே அன்ன சத்திரங்களை உண்டாக்கினர். இவரது நாட்டுக் குடிகள் தங்கள்வீடுகளை மூடுவதே இல்லை. திருடர் பயம் இருந்தால் அல்லவோ வீடுகளை மூட வேண்டும்?

இவரது சம்ஸ்தானத்தில் இரு பெருங்கவிஞர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் வைணவ மதத்தினர். அவர் பெயர் **பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்** என்பது. மற்றொருவர், சைவ சமயத்தினர். அவர் பெயர் **குமரகுருபரர்** என்பது.

நாயகர் பல கவிவாணர்களை ஆதரித்து வந்தார்; ஏழைகளையும் பணக்காரர்களையும் சமமாகப் பாவித்து வந்தார்; நியாய பரிபாலனம் செய்யப் பல பஞ்சாயத்துக்காரரை நியமித்தார். இவர், தமது எழுபத்தைந்தாவது வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

**கேள்விகள் :**

1. திருமலை நாயகர் எப்படிப்பட்ட குணமுடையவர்?
2. திருமலை நாயகர் குடிமக்களை எவ்வாறு ஆண்டார்?
3. திருமலை நாயகர் கட்டடப் பிரியர் என்பதை எவ்வாறு அறியலாம்?
4. திருமலை நாயகர் மஹாலைப்பற்றிச் சிறிது கூறு.
5. திருமலை நாயகரது உருவச் சிலைகளை எங்கெங்குக் காணலாம்?
6. திருமலை நாயகரது சம்ஸ்தானத்தில் இருந்த இருபெரும் கவிஞர் யாவர்?

## 11. 'சொல்லாமற் செய்வர் பெரியர்.'

இங்கிலாந்து தேசம் மிகவும் அழகானது. அதில் லண்டன் மாநகரம் மிகவும் அழகு வாய்ந்தது. அது வியாபாரத்தில் சிறந்து விளங்கும் நகரம். பல பக்கங்களிலிருந்து வர்த்தகர்கள் அந்நகரத்திற்கு அடிக்கடி வருவதுண்டு. அந்நகரத்திலிருந்தும் பல பிரயாணிகள் வேற்றூருக்குப் போவது வழக்கம். இவ்வாறு செல்வதற்கும் வருவதற்கும் தபால் வண்டிகள் அந்நகரத்தில் ஏற்பட்டிருந்தன.

ஒரு நாள் லண்டன் நகரத்தை விட்டு ஒரு வண்டி புறப்பட்டது. அவ்வண்டியில் பிரயாணிகள் உட்கார்ந்திருந்தார்கள். பிரயாணிகளுள் சிலர் ஏராளமான பணம் வைத்திருந்தனர். அவர்கள் செல்லும் வழியோ, கள்ளர்கள் கொள்ளையடிக்கத் தக்க வசதிகள் அமைந்தது.


வண்டி போய்க்கொண்டிருக்கையில், பலர் பல வித விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவன், "நாம் போகும் வழி திருடர் இருக்கும் வழியாயிற்றே! யாராயினும் ஒரு திருடன் வந்து நம்மைத் துன்புறுத்தினால் என்ன செய்வது?" என்றான். அப்போது ஓர் இளம் பெண், "என் வசத்தில் உள்ள நோட்டுகளை என் செருப்பில் வைத்துத் தைத்திருக்கிறேன். அவற்றை எடுத்துச் செல்லக் கள்வனால் ஆகாது,' என்றாள். இவ்வாறு அவர்கள் பல விதமாகப் பேசிக்கொண்டு சென்றார்கள்.

பொழுது சாய்ந்தது. காரிருள் தன் ஆட்சியைச் செலுத்தத் தொடங்கியது. தபால்

வண்டி ஒருகாட்டின் வழியே போய்க்கொண்டிருந்தது. திடீரென்று கள்வர் சிலர் அங்குத் தோன்றி, அந்த வண்டியை நிறுத்தினர். அவர்கள் பிரயாணிகளைப் பார்த்து, "உங்களிடத்தில் உள்ள பொருள்களைத் தந்துவிடுங்கள். இன்றேல், உங்கள் அனைவரையும் சுட்டுக்கொன்றுவிடுவோம்!" என்று பயமுறுத்தினுர்கள்.

திருடர்கள் பலரைச் சோதனை செய்தார்கள். அவர்கள் விரும்பிய பொருள் இல்லை. ஏனென்றுல், பிரயாணிகளுள் பலர் ஏழைகள். அதனுல், அக்கள்வர்களின் தலைவன் ஒரு தந்திரம் செய்தான். அவன் அந்த வண்டியில் இருந்தவர்களைப் பார்த்து, "நீங்கள் எவ்விதத்திலும் நூறு வராகன் கொடுக்க வேண்டும். அல்லாவிடில், உங்கள் எல்லாரையும் சுட்டுக்கொன்றுவிடுவோம்!" என்றுன்.

வண்டியின் உட்புறத்தில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் மிக்க கலக்கத்துடனிருந்தார்; கள்வன் சொன்னதைக் கேட்டார். அவர், செருப்பில் நோட்டை வைத்திருந்த பெண்ணைக் கள்வனுக்குக்காட்டி, "இவள் செருப்பைப் பரிசோதித்தால் உங்களுக்கு வேண்டிய பொருள் கிடைக்கும்," என்றுர். உடனே கள்வர்கள் அவளைச் சூழ்ந்துகொண்டு அவள் செருப்பைப் பரிசோதித்தார்கள்; அதனுள்ளே இருந்த நோட்டுகளை எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் முந்நூறு வராகன் மதிப்புள்ள நோட்டுகளைக் கவர்ந்து சென்றுர்கள்.


EASTERN STUDIO

கள்வர்கள் போனபின் வண்டியில் இருந்த யாவரும்கிழவரைத் தூஷித்தனர். பணத்தைப் பறிகொடுத்தவள் அடைந்த துயரத்திற்கு அளவு இல்லை. வண்டியும் குறித்த ஊரை அடைந்தது. எல்லாரும் இறங்கித் தத்தம் வீடுகளை அடைந்தனர். பணம் இழந்த மங்கை ஆருத துயருடன் தன் வீடு சென்றுள். பெரியவர் எல்லாருக்கும் முன்பு இறங்கித் தமது வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

பணம் இழந்த பெண் தனது மாளிகையில் அதிக துக்கத்துடன் வீற்றிருந்தாள். அப்போது தபாற்காரன், அவளுக்குயாரோ பணம் அனுப்பி இருப்பதாகச் சொன்னுன். அவள் அதிசயங்கொண்டாள்; தனக்குப் பணம் அனுப்பக்கூடியவர் யாரும் இல்லையே என்றெண்ணினுள். அறுநூறு வராகன் அவளுக்கு வந்திருநதது. அதனுடன் ஒரு கடிதமும் வந்தது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது: "அம்மா, நான் நீ வந்த வண்டியில் உட்கார்ந்திருந்த கிழவன். உன்னைக் கள்வரிடம் காட்டிககொடுத்தவன் நானே. நான் அயல் நாடு சென்று பதினுயிர வராகன் சம்பாதித்துககொண்டு, நீ வந்த வண்டியில் வந்தேன். கள்வர்கள் என்னைப் பரிசோதித்திருந்தால், என் பொருள் முழுவதையும் எடுத்துப்போயிருப்பார்கள். உன்னிடம் இருந்தது முந்நூறு வராகன். அவ்வளவோடு அக்கள்வர் தொலைந்தால் போதும் என்று நான் எண்ணினேன். அதனுலேதான் உன்னை அவர்களிடம்

காட்டிக்கொடுத்தேன். நீ இழந்த தொகையைவிட முந்நூறு வராகன் அதிகமாக அனுப்பியிருக்கிறேன். இதைப் பெற்று இன்புறுவாயாக. என்னை மன்னிக்க."

அக்கடிதத்தை வாசித்தாள் அம்மங்கை. அவள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. அவள் கடவுளின் அருளை நினைத்துப் புகழ்ந்தாள். அவள் அப்பெரியவரது அரிய குணத்தை எண்ணி மகிழ்ந்தாள்.

**கேள்விகள் :**

1. தபால் வண்டியில் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் பேசிக்கொண்டதென்ன ?
2. தபால் வண்டியை நிறுத்திய கள்வர்கள் கூறிய கண்டிப்பான வார்த்தை என்ன ?
3. தபால் வண்டியில் சென்று கொண்டிருந்த பெரியவர் கள்வரிடமிருந்து எவ்வாறு தப்பினர் ?
4. பணத்தை இழந்த பெண்மணிக்குப் பெரியவர் என்ன கடிதம் எழுதினர் ?
5. பெரியவர் சொல்லாமல் செய்த காரியம் என்ன ?

## 12. கடமையே சிறந்தது.

**'ஏழாம் ஹென்றி'** என்னும் அரசர் ஒரு நாள் வேட்டையாடச் சென்றார். சென்றவர், நெடுநேரம் வேட்டையாடினர். அவர் மிகுந்த களைப்புற்று ஒரு மரத்தடியில் தங்கி இளைப்பாறினர். அவருக்குத் தாகம் அதிகரித்தது. அருகில் ஒரு சிறுவன் ஆடுகளை மேய்த்துக்-

கொண்டு நின்ருன். அரசர் அவனை அணுகி, "சிறுவனே, எனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும். இங்குச் சமீபத்தில் ஏதேனும் ஊர் இருக்கிறதா?" என்று கேட்டார்.

**பையன்:** ஐயா, பக்கத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்குச் சென்ருல் நீர் கிடைக்கும்.

**அரசர்:** பையா, நீ போய் ஒரு பாத்திரத்தில் நீரைக்கொண்டுவா. நான் இங்கிருக்கிறேன்.

**பையன்:** ஐயா, என் எசமானர் விலை உயர்ந்த இவ்வாடுகளை என் வசம் விட்டிருக்கிருர்; என்னை முற்றிலும் நம்பியுள்ளார். நான் இவற்றை விட்டுச் செல்வேனுயின், சில ஆடுகள் ஓநாய்களுக்கு இரையாகுமே!

**அரசர்:** அப்பா, நீ வரும் வரையில் ஆடுகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். உன் ஆடு ஒன்றேனும் களவு போகாதபடி நான் காவல் காப்பேன். நீ அச்சம் இல்லாமல் செல்லலாம்.

**பையன்:** ஐயா, என் கடமையைச் செய்யாமல் யான் செல்லலாகாது. அப்படிச் சென்ருல், என்னை நம்பிய எசமானர்க்கு நம்பிக்கை மோசம் செய்தவனுவேன். நீங்கள் சென்று வாருங்கள். ஆடுகள் காணமற்போனுல் என்ன செய்வது? நான் உங்களைக் கேட்க முடியுமா? என் கடமையாயுள்ள வேலையை நான செய்து முடிக்க வேண்டாவா? தயவு செய்து என்னைத் துன்பப்படுத்த வேண்டா.

அரசர் அவன் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். சிறுவன் அவ்வளவு புத்தியுடையவனாய் இருப்பான் என்று அவர் எண்ணவேயில்லை. அவர் பின்னும் அவனைச் சோதிக்க எண்ணி, "அப்பா, நான் இவ்வூர் அரசன். எனக்குத் தாகமோ அதிகமாய் இருக்கிறது. நீ சென்று தண்ணீர் கொண்டுவரமாட்டேன் என்கிறாயே!" என்றார்.

அது கேட்ட சிறுவன், "ஐயா, நீங்கள் அரசராயின், மிகவும் சந்தோஷம்! உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். யாராயிருந்தாலும் ஆபத்தில் உதவவேண்டுவதுதான் கடமை. குதிரைமேல் வீற்றிருக்கும் நீங்கள் இந்நேரம் போய் வந்திருக்கலாம். உங்கள் நீர் வேட்கையும் சாந்தியாயிருக்கும். உங்களை யான் அவமதிப்பதாக நீங்கள் எண்ணலாகாது. யான் என்ன செய்வேன்! என் கடமையே எனக்குச் சிறந்தது. என் ஆடுகளை விட்டு யான் செல்லேன். நீங்கள் நீர் வேட்கையால் வருந்துகிறீர்கள். உங்களுக்காக யான் செல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் இங்கு இருக்கும்போது இன்னொருவர் யாரேனும் வந்து தமக்கு நீர் வேட்கை அதிகமாயிருக்கிறதென்றும் நீங்கள் நீர்கொண்டு வரும் வரையில் அவர் இங்கு இருப்பதாகவும் சொன்னால், நீங்கள் என்னைப்போல நீரைத்தேடிப் போகவேண்டும். அத்தருணத்தில் இரண்டோர் ஆடுகள் நிச்சயமாகக் களவு போய்விடும். நான் என்னை நம்பிய எசமானருக்கு நம்பிக்கைத்

துரோகம் செய்தவனுவேன். இவற்றை எல்லாம் அறிவிற்சிறந்தநீங்கள் யோசிக்க வேண்டும். என்னைத் தயவு செய்து வற்புறுத்தாதீர்கள்,'' என்று கூறிவேண்டினன்.

அரசர் அவனை நோக்கி, "பையா, யான், யார் வந்து என்ன கேட்டாலும் இதைவிட்டு நகரமாட்டேன். நீ கவலைப்பட வேண்டா; சென்று வருக,'' என்றார்.

பையன் நகைத்து, "ஐயா, உங்களுக்கிருக்கும் தாகத்தைப் போலவே பிறருக்கும் இருக்கும். உங்களுக்கு நீர் வேட்கை அதிகமாகவும் மற்றொருவர்க்குக் குறைவாகவும் இருப்பதுண்டோ? நன்று நன்று! நீங்கள் பிறருக்கு உதவி செய்யாவிடில், பிறர் உங்களுக்கு எவ்வாறு உதவி புரிவர்?'' என்றான்.

பார்த்தார் அரசர்; சிறுவன் மிகவும்கெட்டிக்காரன் என்பதை உணர்ந்தார். உடனே தமது குதிரையைவிட்டு இறங்கி, அவனைத் தழுவிக்கொண்டார். "அப்பா, நீ புத்திசாலி. உன்னைப்போன்ற யோக்கியனை யான் கண்டதில்லை. கடமையான வேலையைச் செய்பவர் எவருக்கும் அஞ்சார். அதுபோல நீயும் உன் கடமையைச் செய்து முடிப்பதால், அரசனுகிய என்னையும் மதிக்கவில்லை. உனக்கு யான் உயர்ந்த வேலை தருகிறேன்,'' என்று கூறிப் பையனை அழைத்துச்சென்று, தம் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டார்.

கேள்விகள் :

1. ஏழாம் ஹென்றி அரசர் எப்போது ஆடு மேய்க்-கும் சிறுவனைச் சந்தித்தார் ?

2. "நான் இங்கு இருக்கிறேன் ; நீ போய் நீரைக் கொண்டுவா" என்று கூறிய அரசர்க்குச் சிறுவன் கூறிய பதிலென்ன ?

3. அவனைமேலும் சோதிக்கத்தன்னை அரசன் என்று கூறியபோது சிறுவன் சொன்ன பதில் யாது?

4. தன்னை மதியாமல் தன் கடமையைச் செய்த சிறுவனை அரசர் என்ன செய்தார் ?

# 13. அன்னதானமே அனைத்தினும் சிறந்தது.

ஒரு கிராமத்தின் மூன்று பக்கங்களில்காடு-கள் அதிகம் இருந்தன. அந்தக்கிராமவாசிகள் பரம துஷ்டர்களாய் இருந்தார்கள். அந்நியர் யாரேனும்வந்து அன்னம்கேட்டால், அவ்வூ-ரார் அடித்துத் துரத்துவர். அவர்கள் கொடு-மையான காரியங்களையே செய்து வந்தார்கள். அதே ஊரில் ஒருகிழவனும் அவன் மனைவியும் இருந்தனர். அவர்கள் யார் வந்தாலும் அன்-னம் இடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்-தார்கள். கணவனும் மனைவியும் ஒத்த அன்-புடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஓர் இரவு கடவுள் அவ்வூரார்களைப் பரி-சோதிக்க எண்ணி ஒரு தூதனோடு மனித உருவுடன் அந்தக் கிராமத்திற்கு வந்தார் அவர் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி

அன்னம் படைக்கும்படி வேண்டினார். பலர் அவர்களை வைது அனுப்பினர். பலர் அடித்துத் துரத்தினர். முடிவில் அவர்கள் கிழவனும் கிழவியும் இருந்த குடிசையை அடைந்தார்கள். மழை விடாமல் பெய்துகொண்டிருந்தது. கிழவனும் அவன் மனைவியும் தமது வீட்டிற்கு வந்தவர்க்கு அமுது படைத்தனர். அன்னம் மேலும் மேலும் அதிகப்பட்டுக்கொண்டே இருந்தது. அதைக் கண்டு கிழவனும் கிழவியும் ஆச்சரியம் அடைந்தார்கள். பின்பு அவர்கள் அவ்விருந்தினர் வானுலகத்தவரோ என்று சந்தேகித்தார்கள்.

முடிவில் கடவுள் தமது சுயரூபத்தை அவர்களுக்குக் காட்டி, 'அன்பர்களே, இவ்வூர்க் குடிகள் மகா பாவிகள். அவர்கள் எங்களை அடித்துத் துரத்தினார்கள். ஒரு பிடி அன்னம் அளிகக அவர்கள் மனம் துணியவில்லை. மழை பெய்துகொண்டிருக்கும் இந்த நள்ளிரவில் எங்களை உபசரித்து அமுது படைத்த நீங்களே உத்தமர்கள். உங்களுக்கு ஒரு குறைவும் வாராது. நீங்கள் விரும்புவதைக் கேளுங்கள்,' என்றார்.

கணவனும் மனைவியும் கடவுளையும் அவர் தூதனையும் பணிந்து, 'நீங்கள் இந்த ஏழைகளைப் பொருட்படுத்தி வந்ததற்கு நாங்கள் செய்த பாக்கியமே காரணம். நாங்கள் விருந்தினர்க்கு எப்போதும் அமுது படைக்கும்படி அருளவேண்டும். இருவரும் ஒன்றாகவே இறக்கும்படி வரம் தரவேண்டும்,' என்று வேண்டினர்.

கடவுள், 'அன்பர்களே, உங்கள் எண்ணம் பரிசுத்தமானதாய் இருக்கிறது. உலகத்தில் மக்கள் தங்கட்குப் பொருள் வேண்டும் என்றும், தாங்கள் சுகமாக வாழ வேண்டும் என்றும் வரம் கேட்பார்கள். நீங்களோ, மிக எளிய வரத்தைக் கேட்டீர்கள். நீங்கள் கேட்டதை அருளினேம். நீங்கள் நீடூழி வாழ்ந்து முடிவில் எம்மை அடையுங்கள்,' என்று கூறி ஆசீர்வதித்து, தம் தூதனுடன் மறைந்தார்.

கிழவர் குடிசை பொற்குடிசை ஆனது. அக்குடிசையில் எல்லாப் பொருள்களும் குறைவற நிறைந்து கிடந்தன. முப்பத்திரண்டு தானங்களிலும் அன்னதானமே சிறந்தது என்பதை அப்போதே சதிபதிகள் உணர்ந்தார்கள். நெடுங்காலம் இருவரும் குறையின்றி வாழ்ந்து வந்தனர். முடிவில், ஒருநாள் மாலை அவ்விருவரும் வெளியே உலவச் சென்று ஓரிடத்தில் உட்கார்ந்தனர். உடனே அவர்கள் ஆவி இறைவரின் இனிய அடிகளைச் சேர்ந்தது. அவர்கள் உட்கார்ந்து உயிர் விட்ட இடத்தில் இரண்டு அழகிய பூஞ்செடிகள் உண்டாயின. அவர்கள் இருந்த வீடு, இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. என்னே கடவுள் செயல்!

**கேள்விகள் :**

1. கடவுள் மனித வடிவுடன் ஏன் வந்தார்?
2. கிழவனும் கிழவியும் மனித வடிவுடன் வந்த கடவுளை எப்படி உபசரித்தார்கள்?
3. கிழவனும் கிழவியும் வாழ்ந்த அக்கிராமத்தார் எப்படிப் பட்டவர்கள்?

4. தம்மை உபசரித்த கிழவனையும் கிழவியையும் கடவுள் எவ்வாறு பாராட்டினர்?
5. அன்னதானம் செய்த கிழவனும் மனைவியும் பெற்ற நன்மை என்ன?

# 14. மங்கையர்க்கரசியார்

பெண்கள் ஆண்களைப் போலவே நல்ல நூல்களைக் கற்கவேண்டும்; நல்லொழுக்கமும் தெய்வ பத்தியும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். கணவர் சொல்லை மீறுது நடக்கும் உத்தமியாய் ஒவ்வொரு மனைவியும் இருத்தல் அவசியம். கணவனே தெய்வம் என்று நினைத்துப் பூசிக்க வேண்டும்.

ஒரு காலத்தில் **மணிமுடிச்சோழர்** என்னும் ஓர் அரசர் இருந்தார். அவர் மிகுந்த நல்ல ஒழுக்கங்களை உடையவர். அவருக்குக் கடவுள் அருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு '**மங்கையர்க்கரசி**' என்று பெயரிட்டனர். அவ்வம்மையார் வயது ஆக ஆக, நல்லொழுக்கத்துடன் விளங்கினர். அவர் சிவபெருமானிடத்தில் நீங்காத அன்புடையவர்; தயை, சாந்தம், பணிவு முதலிய நற்குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்.

அவர் மணத்திற்குரிய பருவம் அடைந்தார். அரசர் அவருக்குத் தகுந்த மணாளனைத் தேட முயன்றார். அவ்வாறு இருக்கையில், மதுரையை ஆண்டு வந்த **கூன் பாண்டியர்** என்பவர், சோழநாட்டின்மீது படை எடுத்து வந்து, சோழரைத் தோற்கடித்தார். பின்பு

அவர் சோழரின் அருஞ்செல்வியாராகிய மங்கையர்க்கரசியாரை மணம்புரிந்துகொண்டார். சோழர் குலப் பெண்மணி சைவமதத்தைச் சேர்ந்தவர். ஆனல், அவர் கணவரோ, சமண மதத்தைச் சேர்ந்தவர். எனினும், தாம் எவ்விதத்திலும் கணவருக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று முடிவுசெய்துகொண்டார் அரசியார். சோழ அரசர், தம் மகளாருடன் **குலச்சிறையார்** என்னும் தம் அமைச்சரையும் மதுரைக்கு அனுப்பினர்.

மங்கையர்க்கரசியார், 'குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்,' என்றபடி, பாண்டிய மன்னர் மனம்போல நடந்து வந்தார்; அவரே தமக்குக் கடவுள் என்றும் எண்ணினர். என்ருலும், அரசர், சமண மதத்தில் சேர்ந்து இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அதனல், அவர் ஓர் அந்தணர் மூலமாகச் சீர்காழிப் பதியில் இருந்த **திருஞானசம்பந்தரை** மதுரைக்கு வந்து சைவத்தை நிலைநாட்டுமாறு வேண்டினர்.

அவ்வாறே, திருஞானசம்பந்தர் தம் பரிவாரங்களோடு மதுரைக்கு வந்து சோமசுந்தரக்கடவுள் ஆலயத்தைத் தரிசித்து, அருகிலே இருந்த மடம் ஒன்றில் தங்கினர். அவர் வந்து தங்கியதைக் கண்ட சமணர் பயந்தனர்; அவர் தமது மதத்தைப் பொய்ப்பித்துவிடுவரோ என்று ஏங்கினர்; அரசரைச் சைவராக்கிவிடுவரோ என்றும் சந்தேகித்தனர். பின்பு அச்சமணர் அரசரிடம் சென்று, 'அரசே, சைவத்-

தைத் தழுவுபவன் ஒருவன் இங்கு வந்துளன்; அவன் ஒரு மடத்தில் தங்கியிருக்கிறான். நமது மதத்தைக் கெடுக்க வந்தான்போலும்! அவன் தங்கியுள்ள மடத்தில் நெருப்பை வைத்துவிடு-வோம்,' என்றனர். அரசரும் அதற்கு உடன்-பட்டனர். உடனே அச்சமணர் அவ்வாறே செய்தனர்.

திருஞானசம்பந்தர், தம்மடத்தில் தீப்-பற்றியதைக் கண்டார்; சிவபெருமானைக் குறித்து ஒரு பதிகம் பாடினார். உடனே அந் நெருப்பு அம்மடத்தை விட்டுவிலகி, அரசரை வெப்பு நோயாகப் பற்றியது. நோயின் துன்-பம் பொறுக்கமாட்டாமல் அரசர் அலறினார். மங்கையர்க்கரசியாரும் பெரிதும் வருந்தினர். அரசர்க்குண்டான வெப்பு நோயைத் தீர்க்கப் பல வைத்திய நிபுணர் சென்றனர். ஒருவரா-லும் சுகமாக்க முடியவில்லை. பிறகு சமணர் தம் மந்திரங்களைச் செபித்தனர். அதனாலும் பயன் பட வில்லை. சமணர் நிலை கலங்கினர். அரசர் பட்ட துன்பம் சொல்லுதற்கு இய-லாதது.

மங்கையர்க்கரசியார், 'சம்பந்தரைத் துன்புறுத்தியதாலேதான் இவர்க்கு இந்நோய் வந்தது!' என்று எண்ணி, தம் கணவரை நோக்கி, 'நாதரே, இந்நோய் திருஞானசம்பந்-தரால் நீக்கப்படும். அவரை வரவழையுங்கள்,' என்று பணிவுடன் கூறினர். அரசரும் அதற்கு உடன் பட்டார்.

திருஞானசம்பந்தர் அரசரை அடைந்தார். சமணர்களும் அங்கு இருந்தார்கள். உடனே அரசர், திருஞான சம்பந்தரைத் தமக்கு உற்ற நோயைத் தீர்க்குமாறு வேண்டினர். அப்போது சமணர், அரசரது இடப்புறத்தில் உள்ள நோயை மாத்திரம் தமது மந்திரவலியால் நீக்க உடன் பட்டனர். அது பயன் படவில்லை. ஆனால், சம்பந்தர் திருநீற்றை எடுத்து ஒரு பதிகம் பாடிச் சிவபிரானை நினைந்து அரசரது வலப்புறத்திலே தடவினர். உடனே அங்கிருந்த நோய் அகன்றது. இடப்புறத்தில் அதிக நோய் உண்டாய்விட்டது. அங்குள்ள நோயைச் சமணர்களால் நீக்க முடியவில்லை. பின்னர்ச் சம்பந்தரே இடப்புற நோயையும் நீக்கினர்.

அரசர் சம்பந்தரின் மகிமையை அப்போது தான் அறிந்தார். சமணர் சம்பந்தர் மீது பொறாமை கொண்டு அவரை வாதுக்கழைத்தனர். அவரும் அதற்கு உடன்பட்டனர். இருதிறத்தாரும் அவரவர் மதக் கொள்கைகளை ஏடுகளில் எழுதி நெருப்பிலிட்டனர். சமணரது ஓலை எரிந்து விட்டது. சம்பந்தரது ஓலை எரியவில்லை மீண்டும் அவர்கள் தத்தம் சித்தாந்தங்களை ஓலையில் வரைந்து வைகையாற்றின் வெள்ளத்தில் இட்டார்கள். சம்பந்தர் எழுதிய ஓலை நீரோட்டத்தை எதிர்த்து நின்றது. சமணர் தீட்டிய ஓலை ஆற்றோடு போய்விட்டது. இவ்வாறு மூன்று வாதங்களிலும் சமணர்

தோற்றனர். உடனே அரசர் சைவத்தைத் தழுவினர்.

ஏற்கெனவே சைவப் பெண்மணியாயிருந்த அரசியாருக்கு அரசரும் தம் மதத்தைத் தழுவியது பேரானந்தத்தை விளைத்தது.

**கேள்விகள் :**

1. மங்கையர்க்கரசியார் பாடத்தில் பொதுவாகப் பெண்கள் எப்படி வாழவேண்டும் ?
2. மங்கையர்க்கரசியார் எத்தகைய சிறந்த குணமுடையவர் ?
3. மங்கையர்க்கரசியார் திருமணம் எவ்வாறு நடந்தது ?
4. கூன்பாண்டியன் சைவ சமயத்தைத் தழுவியது எவ்விதம் ?
5. ஞானசம்பந்தர் சமணர்களை எவ்வாறுவென்றார்?
6. ஞானசம்பந்தரைப் பற்றிச் சமணர்கள் அரசரிடம் கூறியதென்ன ?
7. ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த வரலாற்றை எழுது.
8. கூன்பாண்டியனது வெப்பு நோய் எவ்வாறு நீங்கியது ?

## 15. கொள்வதைவிடக் கொடுப்பதே நன்று.

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் **கோவிந்தன்** என்பது. அவனுடன் எந்நேரமும் இருந்து அவனுக்குக் கல்வி கற்பிக்கத் தக்க ஓர் ஆசிரியர் வேண்டுமென்று கனவான் விரும்பினன். அதற்குஏற்றவாறு ஓர் உபாத்தியாயர் கிடைத்தார். அவர் மிகவும் நற்குணம் வாய்ந்தவர்.

ஒரு நாள் உபாத்தியாயரும் மாணவனும் வெளியே உலவச் சென்றனர். அவர்கள் வயல்களை அடைந்தார்கள். ஒருவயலுக்கு அருகில் பழைய செருப்புகள் கிடந்தன. அவற்றை ஆசிரியரும் மாணவனும் கண்டனர். அவை அந்த வயலில் உள்ள கூலியாளுடையவை என்று அவர் நினைத்தனர்.

மாணவன் ஆசிரியரை நோக்கி, 'ஐயா, நாம் ஒரு வேடிக்கை செய்யலாம்?' என்றான்.

உபாத்தியாயர், 'என்ன வேடிக்கை?' என்று வினவினர்.

கோவிந்தன், 'ஐயா, நாம் இந்தச் செருப்புகளை எடுத்துப் போய்விடலாம். நாம் இருவரும் அதோ உள்ள புதரண்டை ஒளிந்து கொள்வோம். வேலையாள் வந்து செருப்பைக் காணமல் என்ன செய்கிறான் என்று பார்ப்போம்,' என்றான்.

ஆசிரியர், 'கோவிந்தா, நாம் அவ்வாறு செய்யலாகாது; அவன் மனம் வருந்தும்படி செய்வது தகாது. யான் கூறும் விதம் செய்: நீ செல்வந்தரின் ஏக புத்திரன். நீ இந்தச் செருப்புகளை எடுத்துச் சென்று வேடிக்கை பார்ப்பதைவிட, இவற்றில் இரண்டு ரூபாய்களை வைத்துவிடு. அக்கூலியாள் என்ன செய்கிறான் என்று பார்ப்போம்,' என்று கூறினார்.

கோவிந்தன் ஆசிரியர் சொன்னவாறே இரண்டு ரூபாய்களைச் செருப்பில் வைத்தான.

இருவரும் புதர் மறைவில் ஒளிந்துகொண்டனர்.

செருப்பிற்கு உரியவன் தன் வேலைகளை முடித்துவிட்டு வந்தான்; வழக்கம் போலத் தன் செருப்பில் காலை விட்டான். காலில் ஏதோ ஒன்று உறுத்துவது போலத் தோன்றியது. அவன் செருப்பைக் கழற்றிப் பார்த்தான். அதில் ரூபாய் இருக்கக் கண்டான்; உடனே அவன் ஆச்சரியம் கொண்டான்; மற்றொரு காலில் உள்ள செருப்பையும் கழற்றினான்; அதிலும் ஒரு ரூபாய் இருக்கக் கண்டான்; பேரானந்தம் கொண்டான்; ரூபாய்களை வைத்தவர் யார் என்று எண்ணிச் சுற்றிலும் பார்த்தான். ஒருவரும் காணப்படவில்லை; உடனே முழங்காற்படியிட்டுக் கடவுளைத் தொழுதான்; பின்னர், தன் வீட்டை நோக்கிச் சென்றான்.

கோவிந்தன் குடியானவன் செய்ததைக் கண்டு மகிழ்ந்தான். ஆசிரியர், 'கோவிந்தா, கொள்வதைவிடக் கொடுப்பதே நன்று, என்பதை உணர்ந்தாயா?' என்றார்.

**கேள்விகள் :**

1. கோவிந்தன் செருப்புகளைக் கண்டு உபாத்தியாயரிடம் கூறியது என்ன?
2. உபாத்தியாயர் ஏன் கோவிந்தனது வேடிக்கைக்கு ஒத்துக்கொள்ளவில்லை?
3. உபாத்தியாயர் கூறிய விதம் யாது?
4. ரூபாயிருந்த செருப்புக்கு உரியவன் செய்தது என்ன?
5. 'கொள்வதைவிடக் கொடுப்பதே நன்று' என்னும் நீதியை விளக்கும் கதையைச் சுருக்கி எழுது.